உ

சிவமயம்



தென்மராட்சி, மீசாலையைப்

பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் பொன்னம்மா சதாசிவம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவு மலர்

2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தென்மராட்சி, மீசாலையைப்
பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# பொன்னம்மா சதாசிவம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அன்னையின் அடியிணைக்கு

# சமர்ப்பணம்



பத்தாவுக்கேற்ற பதிவிரதை துணைவியாய்

பாசமுள்ள சகோதரற்கு பரிவுகாட்டும் உடன்பிறப்பாய்

நேசமுள்ள உறவுகட்கு நிழல்கொடுத்த உத்தமியாய்

நிசமற்ற வாழ்வினிலும் நேரியகுணக் குன்றாய்

அமைதியும் அடக்கமும் அறிவுசேர் பான்மையுமாய்

அகிலத்தில் நீர்நடந்து அரனடி சேர்ந்ததெண்ணி

நினைவுகளைச் சுமந்து நெட்டுயிர்த்து உயிர்வளர்த்து

மனமுடனே காணிக்கையாய்


இம்மலரைச் சமர்ப்பித்தோம்.

**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அன்னை மடியில்:
14 - 06 - 1936

ஆண்டவன் அடியில்:
01 - 06 - 2012

அமரர் திருமதி

# பொன்னம்மா சதாசிவம்

அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டது நந்தன வைகாசி வளர்மதி
பூண்ட ஏகாதசி போயினளே - வேண்டியுமே
பொன்னம்மா நல்லாள் பூவும் பொட்டுமதாய்
சொன்னடி சென்றாள் விரைந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# தோத்திரப்பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

நல்ல சொற் பொருணாளு நடத்தவும்
எல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லும் யானைமுகத்தினை மேவிவாழ்
வல்லபைக் குரியானை வாழ்த்துவாம்.

## தேவாரம் - திருத்தாண்டகம்

நில்லாத நீர்சடைமேல் நிற்பித் தானை
நினையாவென் நெஞ்சை நினைவித் தானைக்
கல்லா தனவெல்லாங் கற்பித் தானைக்
காணா தனவெல்லாம் காட்டி னானைச்
சொல்லா தனவெல்லாம் சொல்லி யென்னைத்
தொடர்ந்திங் கடியேனை யாளாக் கொண்டு
பொல்லாவென் நோய்தீர்த்த புனிதன் தன்னைப்
புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

## திருவாசகம்

மாறிநின்று எனை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின்று என்னுள் எழுபரஞ்சோதி
உள்ளவா காணவந் தருள்வாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று விம்மி
மிகு திருவா ரூரில்
மழ விடையாற்கு வழிவழியாளாய்
மணஞ் செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க
பூதபரம்பரை பொலிய புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலி திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

## திருப்புகழ்

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரை குறியாதே
உபதேச மந்திர பொருளாலே
உனைநான் நினைந்தருள் பெறுவேனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இபமா முகத்தனுக் கிளையோனே
இமவான் மடந்தை உத்தமி பாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருஆவினன் குடிப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள்சைவ நீதிவிளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

## அல்லாரை சீமென்தான் பிள்ளையாரிடம் ஆத்மசாந்தி வேண்டுதல்

ஐங்கர மாநிறை சோலைப் பதியினில்
தங்கியே அருள்செயும் விநாயக முதல்வ
துங்கக் கரிமுக தொப்பை அப்பனே
சங்கடந் தீர்ப்பாய் குலதெய்வம் நீயே.

தென்னைகள் சுமக்கும் இளநீர்க் குலைகள்
வண்ணமாய் அசைந்து வளைந்து ஆடிடும்
தொன்மையாம் தானே தோன்றிய விநாயக
பொன்னம்மாவுக் காத்ம சாந்தி அருள்வாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரமூர்த்தி சுவாமிகளது
# நமச்சிவாயப் பதிகம்

1. மற்றுப் பற்றெனக் கின்றிநின் திருப்
    பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந் தேன்இனிப் பிற
    வாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க்கரை
    யூரிற் பாண்டி கொடுமுடி
நற்றவா உனைநான் மறக்கினும்
    சொல்லும்நா நமச்சி வாயவே.

2. இட்டநும்மடி ஏத்துவாரிகழ்ந் திட்டநாள் மறந்திட்ட நான்
கெட்டநாளிவை யென்றலால்கரு தேன்கிளர் புனற்காவிரி
வட்டவாசிகை கொண்டடி தொழுதேத்து பாண்டிக்கொடுமுடி
நட்டவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே.

3. ஓவுநாளுணர் வழியும்நாளுயிர் போகுநாளுயர் பாடைமேல்
காவுநாளிவை யென்றலால்கரு தேள்கிளர் கொடுமுடி
பாவுதண்புனல் வந்திழிபரஞ் சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே.

4. எல்லையில்புகழ் எம்பிரான்எந்தை தம்பிரான் என்பொன்மாமணி
இல்லைஉந்தி வளம்பொழிந்திழி காவிரியதன் வாய்க்கரை
நல்லவர்தொழு தேத்துஞ்சீர்க் கறையூரிற் பாண்டிக்கொடுமுடி
வல்லவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே.

5. அஞ்சினார்க்கரண் ஆதியென்றடி யேனும்நான்மிக அஞ்சினேன்
அஞ்சலென்றடித் தொண்டனேற்கருள் நல்கினாய்க் கழிகின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவைமார்குடைந் தாடுபாண்டிக் கொடுமுடி
நஞ்சணிகண்ட நாள்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏடுவான்இறை திங்கள்சூடினை யென்பின் கொல்புலித்தோலின்மேல்
ஆடுபாம்பத ரைக்கசைத்த அழகனே யந்தண்காவிரி
பாடு தண்புனல் வந்திழிபரஞ் சோதிபாண்டிக் கொடுமுடி
சேடனேயுனை நான்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே.

விரும்பி நின்மலர்ப் பாதமே நினைந்தேன் வினைகளும் விண்டன
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெழில்பெற நின்ற காவிரிக்கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோலமால்குடைந் தாடுபாண்டிக்கொடுமுடி
விரும்பனேயுனை நான்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே.

செம்பொன் நேர்சடை வாய்திரிபுரந் தீயெழச்சிலை கோலினாய்
வம்புலாங்குழ லாளைப்பாகம் அமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவமாமயி லாடு பாண்டிக்கொடுமுடி
நம்பனேயுனை நான்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே.

சாரணன்றந்தை எம்பிரானெந்தை தம்பிரானென் பொன்மாமணியென்று
பேரெணாயிர கோடிதேவர் பிதற்றி நின்று பிரிகிலார்
நாரணன்பிர மன்தொழுங்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடிக்
காரணாவுனை நான்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே.

கோணியபிறை சூடியைக் கறையூரில் பாண்டிக் கொடுமுடி
பேணியபெரு மானைப் பிஞ்ஞகப் பித்தனைப் பிறப்பில்லியை
பாணுலாவரி வண்டறை கொன்றைத் தாரணைப் படம்பாம்பரை
நாணனைத்தொண்ட னூரன் சொல்லி சொல்லுவார்க் கில்லைதுன்பமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் வணக்கம்

ஒருகோட்ட னிரு செவியன்மும்
மதத்த னால்வா மைங்கரத்தனாறு
தரு கோட்டம் பிறையிதழித் தாழ் சடையான்
தருமொரு வாரணத்தின் தாள்கள்
உரு கோட்டன் பொடும் வணங்கியோவாதே
யிரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திரு கோட்டு மயன்திருமால் செல்வமு மொன்
றோனென்னச் செய்யும் தேவே

- சித்தியார்

# தேவாரம்

1. ஓவுநா ளுணர்வழியு நாளுயிர்போ
குநாளுயர் பாடைமேற்
காவுநா ளிவை யென்ற லாற்
கருதேன் கிளர்புனற் காவிரி
பாவுதண் புனல்வந்திழி
பரஞ்சோதி பாண்டிக் கொடுமுடி
நாவலா வுனைநான் மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே.

2. கூற்றாயின வாறுவிலக் ககிலீர்
கொடுமை பல செய்தன நானறியே
னேற்றா யடிக்கே யிரவும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதுந்
தோற்றாதென் வயிற்றின கம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
வாற்றேன டியேனதிகைக் கெடில
வீரட்டானத் துறை யம்மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையார் போயினார் தாயாரும்
போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற்கே மனம்
வெத்தியாய் ஏழை நெஞ்சே
அந்தணர் ரூர்தொழு துய்யலாம்
மையல் கொண்டஞ்சல் நெஞ்சே.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்
தாழிளம் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன் றெமக்கில்லையேல்
அதுவோ உன தின்னருள், ஆவடுதுறை அரனே.

நனவிலும் கனவிலும் நம்பா உன்னை
மனவிலும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனலெரி அனல்புக்கு கையவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன் றெமக்கில்லையேல்
அதுவோ உன தின்னருள், ஆவடுதுறை அரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வக் துதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய்கேனே.

தந்தையார் தாயா ருடன்பி றந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தாமாரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமா மிதற்கேதும் மகிழவேண்டா
சிந்தையீ ருமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்கலாமே.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேந்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானளாத் தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லாராகில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளரே.

திருநாமம் அஞ்செழுத்தும் செப்ப ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியத்தார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே.

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோல மாய
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானி யல்லேன்
நல்லாரோ டினசந்திலேன் நடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தேன் அல்லேன்
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேசவல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே யல்லால் ஈயமாட்டேன்
என்செய்வான் தோன்றினேன் ஏழையேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பொன்னம்மா சதாசிவம் அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

ஈழத்திருநாட்டின் சிகரமென மிளிரும் யாழ்ப்பாணத்தில் தேமதுரத் தமிழ் வளர்க்கும் தென்மராட்சி தலையாயது. இங்கே நீர் வளம், நில வளம் மிக்கதும், வானோங்கும் தென்னை, பனை, பலா, மாஞ்சோலையாம் மீசாலைப்பதி போற்றுதற்குரியது. சைவ விழுமியங்களையும் ஆசார பண்பாட்டு மரபுகளையும் பேணிக்காக்கும் சீரிய பணியை இப்பதி கொண்டதாகும்.

இவ்வூர் சைவப் பெரியார்கள் வழித்தோன்றலில் வந்தவர்களான கணபதிப்பிள்ளை முத்துத்தம்பிக்கும் அன்னப்பிள்ளைக்கும் இரண்டாவது புத்திரியாக அமரர் பொன்னம்மா அவர்கள் 14-06-1936 ஆம் ஆண்டு பிறந்தார்.

பெற்றோர்கள் மனம் மகிழ, உற்றோர்கள் பார்த்து உவக்க சிறுபிராயத்திலிருந்தே விவேகமும் சுறுசுறுப்பும் உடையவராக வளர்ந்தார். அமரர் பொன்னம்மா அவர்கள் தனது உடன்பிறப்புக்களான ஏரம்பு, இராசமணி, பொன்னம்பலம், செல்லத்துரை, அன்னலட்சுமி, யோகநாதன் ஆகியோரின் பாசமழையில் நேசமுடன் வளர்ந்து வந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலையிலும் மேல் வகுப்புக்களை சங்கத்தானை இந்துக்கல்லூரியிலும் பயின்று சி.த.ப. பரீட்சையிலும் சித்தி எய்தினார்.

திருமண வயது நெருங்க பெற்றோர்களின் விருப்பத்திற்கேற்ப உழைப்பால் உயர்ந்த சிறந்த அறிவும் குணமும் விடாமுயற்சியும் கொண்ட கந்தர் பெரியதம்பி சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் மூன்றாவது புதல்வன் சதாசிவம் அவர்களைத் தனது இனிய கணவராகக் கைப்பிடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறம் என்னும் நல்லறம் இனிதே ஓடிற்று. தமிழ்மொழித் திறனும் சைவப்பணியும் சிந்தையில் சேர, மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயில் அன்னதான சபையில் இருவரும் முன்னின்று உழைத்தனர். மேலும், அன்னாரின் பரம்பரைக் கோயில்களான சிமையன்தாழ்வுப் பிள்ளையார், இராமாவில் கந்தசுவாமி, சீமாவளவு வைரவர் ஆகிய தலங்களிலும் அளவிலாப் பக்தி கொண்டு விளங்கினார்.

ஏற்கனவே தகப்பனாரை இழந்தவரான அன்னார், பின்னர் தாயாரையும் அடுத்தடுத்து மூன்று சகோதரர்களையும் இழந்தது ஆண்டவன் சோதனை போலும். இளைய சகோதரரான யோகநாதன் நோயுற்றிருந்தவேளை தன் பிள்ளைபோல் தானே வீட்டில் வைத்து வைத்தியம்செய்வித்து, அந்திமக் கிரியைகளையும் செய்தார்.

அடுத்தடுத்து துன்பம் அடைந்த அன்னாருக்கு இறுதியில் விடாது நோய் ஏற்பட்டது. சுமார் ஒரு வருடத்திற்கும் மேலாக நோயிலிருந்து விடுபட முடியாமல் இருந்தார். இந்நோயால் தாக்கப்பட்ட காலத்தில், இவரின் மைத்துனியான வைத்திய கலாநிதி செல்வராணி பொன்னம்பலம் அவர்களின் ஆலோசனையும், பேருதவியும் கிடைத்தது குறிப்பிடத்தக்கதொன்றாகும். அப்படியிருந்த போதும் சிகிச்சை எதுவும் பலனளிக்காது 01-06-2012 இல் இவர் இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டார்.

வானுலகில் என்றும் அவரை இருத்தி வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து இன்று வானுறையும் தெய்வத்துள் ஒன்றாகிவிட்ட அமரர் பொன்னம்மா சதாசிவம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம்ஒரு நரகமென மதிகுறைந்தோர் உணர்வார்;
உயர்வான பள்ளியென உயர்வோர்கள் உணர்வார்;
பலநல்ல அனுபவிக்கும் சுவர்க்கமென்பர் வீரர்;
பாங்குபெறு கனவென்பர் துறவுமனம் கொண்டோர்;
சிலதீமை பலநன்மை உடையதென்பர் சீலர்;
தீமைபல நன்மைசில என்பார்கள் பொதுவர்;
நிலவும்ஒரு சுவையூட்டும் நாடகமாய்ப் பார்ப்பார்
நீள்ஞான சித்திபெற்ற ஞானியர்கள் தாமே.

## சிந்திக்க சிலநொடிகள்

*சிரமங்கள் வலியால் மட்டுமே சிகரங்கள் வழிதெரியும்.*
*உள்ளத்தின் காயங்களே வெற்றியின் உயரத்தைக் காட்டும்.*

*நிஜங்கள் தரும் சுகத்தைவிட நினைவுகள் தரும் சுகம் அதிகம்.*
*நிஜங்கள் நிலைப்பதில்லை நினைவுகள் அழிவதில்லை.*

*எந்த பொருளின் மீது உனக்கு ஆசை அதிகமோ*
*அந்தப் பொருளால் உனக்கு துன்பமும் அதிகம்.*

*உன்னிடம் அன்பாகப் பேசும் பொய்யான உள்ளங்களை விட*
*உன்னிடம் உரிமையோடு சண்டை போடும் இதயங்களை நேசி.*

*மரணம் என்பது ஒருநொடியில் உயிர் போக்கும். ஆனால்*
*பிரிவு என்பது ஒவ்வொரு நொடியும் உயிர் போக்கும்.*

*சிலரைப்பற்றி அறியாமலே நாம் அவர்களை வெறுக்கிறோம்.*
*வெறுப்பதாலேயே அவர்களைப்பற்றி அறியாமல் இருக்கிறோம்.*

*கோபப்பட ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். ஆனால்*
*அவற்றில் ஒன்றும் சரியானதாக இருக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் வேண்டுவோம்

புதியதோர் உலகம் செய்வோம் என்று பலரும் கூறி அவாப்படுவார்கள். மனிதரது கற்பனைக் கோட்டைக்கு அளவே யில்லை. கவலையற்ற வாழ்க்கையில் குறையில்லா நிறைவில் வாழவேண்டும் என்று ஆசைப்படுவார்கள். இதுவே மனித இயற்கை.

பிறந்த நாள் தொட்டு இரவுபகல் மாறுகின்றது. இருளும் ஒளியும் மாறி மாறி உண்டாகின்றது. இருளை விரும்பாத நாம் ஒளியை ஏற்றி சாதனை செய்கின்றோம். சாதாரண வாழ்வில் இவ்வாறு என்றால் வாழ்வில் பிறப்பை அறுப்பதற்கு இறைவன் கருணை ஒளி அவசியம் என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சி அபரிமிதமானது. ஆயினும் மனிதருக்கேற்படும் நோய்கள் புதியனவாகவும் அவற்றுக்காக புதிய மருந்து வழிவகைகளும் கண்டாலும் வைத்தியசாலைகள், விடுதிகள் எல்லாம் நோயாளர்களால் நிரம்பி வழிகின்றன. ஏழை - பணக்காரர், படித்தவர் - பாமரர் யாரைத்தான் நோய் அணுகவில்லை.

எமது முந்திய பிறவியில் நாம் எப்படி வாழ்ந்தோம்? என்ன செய்தோம் என்று அறிந்துகொள்ள முயற்சித்ததும் இல்லாமல் காலம் கழிக்கின்றோம். எமது சிந்தனை, செயல்களை எல்லாம் செம்மையாகக் கைக்கொண்டால் இனி எமக்குக் கிடைப்பது சீரிய வாழ்வே என்ற நம்பிக்கையுடன் வாழ்வோம்.

"தற்காத்துத் தற்கொண் டான்பேணி தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்ற வள்ளுவர் வாக்குக்கு அமைய தன் பிறந்த குடும்பத்திற்கும் சகோதரர்கள் முன்னேற்றத்திற்கும் பின் தன் துணைவரது உயர்வு, சிறப்பிற்குமாக உழைத்தவர் அமரர் திருமதி பொன்னம்மா சதாசிவம் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் முப்பத்தைந்து வருட கால இல்லற வாழ்வில் இணைபிரியாத தம்பதியர்களாக வாழ்ந்ததைக் கண்டு பலரும் பெருமைப்படும் அளவிற்கு அவர்கள் ஒற்றுமையான தம்பதியராக வாழ்ந்தனர்.

யார் கண் பட்டதுவோ? இல்லை இறைவனின் திருவிளையாடலோ அமரர் அவர்கள் ஒரு வருட காலம் நோய்வாய்ப் பட்டிருந்தார். வைத்தியசாலைக்கு போவது, வருவது என்றால் கூட இருவரையுமே சேர்த்துக் காணலாம். அந்தளவு அமரரது துணைவர் சளையாது சிகிச்சைகளை முன்னெடுத்தும் விதி அம்மையாரைப் பறித்துவிட்டது. காலக் கணக்கிற்கு யாருமே விதி விலக்கல்ல.

ஆகவே அம்மையார் திருமதி பொன்னம்மா சதாசிவம் அவர்கள் இறை சந்நிதியில் சேர ஆத்மா சாந்தியடைய நாமும் வேண்டுவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**திருமதி தெ. கிருஷ்ணசாமி,**
ஓய்வுபெற்ற இசையாசிரியை,
மீசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மசாந்திக்காய் வேண்டுகின்றேன்

அவரவர் விதியோ? ஆண்டவன் அருளோ? தெரியாது. பிறந்தவர் இறப்பதும், இறந்தவர் பிறப்பதும் நியதி. இதன்படி திருமதி பொன்னம்மா சதாசிவம் அவர்களும் காலன் கைப்பட்டார்.

இவர் படிக்கும்போது, பாடசாலையில் சிறந்த ஒரு மாணவியாகத் திகழ்ந்தார். அது மாத்திரமல்ல. அடக்கம், பொறுமை, அன்பு உள்ள மாணவியாக இருந்து கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையிலும் நல்ல பெறுபேறுகளைப் பெற்றார். ஆனால், தொடர்ந்து படிக்க முடியாத நிலையில் பாடசாலையை விட்டு விலகி நல்லதொரு குடும்பப் பெண்ணாகத் திகழ்ந்தார்.

"தான் கெடினும் தக்கார் கேடு எண்ணற்க" என்பதற்கிணங்க தனது சகோதரர்கள் கற்க ஒத்தாசையாக இருந்தார். இந்நிலையில் திருமண படலம் ஆரம்பமானது. பெரியதம்பி சதாசிவம் அவர்களை வரனாகத் தேர்ந்தெடுத்தார்கள். (சந்தை மேற்பார்வையாளரும், பதில் வருமான மேற்பார்வையாளர்) இவர்கள் இருவரும் ஒத்த நட்சத்திரமுமாக இருந்தமையினால், கருத்து ஒருமித்து சந்தோசமாக இருந்தமை கண்டு நாங்களும் மகிழ்ச்சியடைந்தோம். ஏறத்தாழ முப்பத்தேழு வருடங்கள் வாழ்க்கை சந்தோசமாக உருண்டு ஓடியது.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி நின்றது அறம்"

என்பதற்கு ஏற்ப நல்லறம் ஆற்றி நல்வாழ்வு வாழ்ந்தார்கள்.

கண்பட்டதுபோல, கடந்த ஒன்றரை வருட காலமாக நோயினால் பீடிக்கப்பட்டார். அன்று முதல் துன்பத்தையும் துயரத்தையும் அனுபவிக்கலாயினர். கணவரும் இவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயிலிருந்தும் மீட்டெடுப்பதற்காக அரும்பாடுபட்டார். என் செய்வது கணவனின் முயற்சி பலனளிக்கவில்லை.

ஆனால் ஒன்று ஆண்டவன் திருவருளோ? அன்னாரின் நற்பலனோ? தெரியவில்லை. கணவர் இருக்க பூவும் பொட்டுமாய் நிறைகுடமாய் போவதற்கும் கொடுத்துவைக்க வேண்டும். அதுவும் ஏகாதசித் திதியில் ஆண்டவன் அழைத்திருக்கிறான்.

எல்லோரும் ஒருநாள் இவ்வுலகைவிட்டுச் செல்வது நியதி. எதுவும் எமக்குச் சொந்தமும் நிந்தமும் அல்ல.

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ - மாநிலத்தில்
நமக்கும் அதுவழியே நாம் போமளவும்
எமக்கு என்ன என்று இட்டுஉண்டு இரும்."

எம்மால் முடிந்தவரை செய்ய வேண்டிய கிரியை களைச் செய்து ஆத்ம சாந்திக்காக வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**அண்ணன் க. பெ. மார்க்கண்டு**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரார்த்தித்து நிற்கின்றேன்

இதுவரை காலமும் நான் அறிந்தமட்டில் நீங்கள் ஏவிய பணியை நான் அவ்வாறு செய்து முடித்தேன். ஒருபோதும் குறைவைத்தாக நான் உணரவுமில்லை. இடப்பெயர்வுக்கு முன்னும் சரி, பின்னும் சரி நீங்கள் அழைத்து எந்த உதவி கேட்டாலும் நான் மறுத்ததும் இல்லை.

என் கணவர் குட்டி கூட உங்களை சித்தி என்றே கூப்பிடுவார். நீங்கள் மாவடிப் பிள்ளையாருக்கு பூ கொய்து தர அவர் கொண்டுபோய் கொடுப்பார்.

எங்குபோய் வந்தாலும் குட்டி ஏன் சாப்பிட வரவில்லை என்று பேசிவிட்டு குட்டிக்காகப் போட்டு மூடி வைத்த சாப்பாட்டைக் கொடுப்பீர்கள். அந்தளவுக்கு என் கணவரையும் நேசித்ததை நான் மறக்கவில்லை.

சீமென்தாள் பிள்ளையாருக்கும் சீமாவளவு வைரவருக்கும் கற்பூரம் கொளுத்தும்படி அடிக்கடி என் கணவரிடம் கற்பூரம் கொடுப்பீர்கள்.

வந்த நோய் மாறும் மாறும் என்று நாமும் நம்பினோம். உங்களுக்கு வருத்தம் இருந்தாலும் வருத்தத்தைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாமலே வாழ்ந்து முடித்தீர்கள். அடிக்கடி கோயில் கோயில் என்று அலையாவிட்டாலும் குடும்பமே கோயில் என்று வாழ்ந்த உங்களை இறைவன் ஏகாதசித்திதியில் அழைத்திருக் கின்றார். உங்கள் ஆத்மா என்றென்றும் சாந்தியடைய பிரார்த்தித்து நிற்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**திருமதி வதனா தர்மலிங்கம்**
**(பெறாமகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்:
1936
♦
06
♦
14



மறைவு:
2012
♦
06
♦
01

**சாவகச்சேரி சந்தை முன்னாள் மேற்பார்வையாளரும்**
**சமூகத் தொண்டருமான திருவாளர் *சதாசிவம்* அவர்களின்**
**பாசமிகு மனைவி**

## அமரர் சதாசிவம் பொன்னம்மா அவர்கள்

*இந்நாள்வரை இந்த உலகில்*
*கணவனைப் போற்றிக்*
*கடவுளை வணங்கி*
*நல்லன எல்லாம் செய்து களைத்தோ*
*சென்றனள் பூவும்பொட்டுடன் இனிதே!*

*அன்னாரின் பிரிவினால் ஆறாத் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**மாவடிப் பிள்ளையார்**
**அடியார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

மாற்றமாம் உடலே மாறிடும் வாழ்வுமே
ஏற்றமும் இறக்கமும் என்றும் நியதியே
கூற்றுவன் கொண்டு போம்வரை கடவுளை
போற்றுவோம் துதிப்போம் புண்ணியம் செய்குவோம்.

சிந்தனை செயல்களை செம்மையாய் செய்திடின்
வந்ததுயர்களும் வருத்தா அகலுமே
சொந்தமாய் நமக்கென்று ஒன்றும் இல்லையே
சிந்தையில் கொண்டால் நமக்கில்லை பயமே.

## *சிந்திக்க சில வரிகள்...*

*01.* வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நாமாக இருப்போம்.

*02.* ஒருவரை புரிந்து கொள்வது கடினம். புரிந்து கொண்டபின் பிரிந்து செல்வது மிகக்கடினம்.

*03.* பேசவேண்டிய நேரத்தில் அமைதியாக இருந்துவிட்டால் அமைதியான நேரத்தில் நிம்மதியாக இருக்கமுடியாது.

*04.* காலங்காலமாக பெண்களை கண்ணீர் சிந்த வைத்துகொண்டிருப்பது அன்று - உடன்கட்டை, இன்று - வரதட்சனை.

*05.* நீ யாருக்காகவும் கண்ணீர் சிந்தாதே. உன் கண்ணீருக்கு தகுதியான வர்கள் உயிரோடு உள்ளவரை உன்னை அழவிடமாட்டார்கள்.

*06.* கண்ணாடி எம் நெருங்கிய நண்பன். ஏனெனில் நாம் எப்போதும் அழும்போது அது சிரிப்பது இல்லை.

*07.* உண்மைக்காக எதையும் தியாகம் செய்யலாம். ஆனால் எதற்காகவும் உண்மையை தியாகம் செய்யக்கூடாது.

*08.* நேசிப்பது எல்லாம் கிடைத்து விட்டால் கண்ணீர்த் துளிகளிற்கு மதிப்பில்லை. ஆனால் கிடைப்பதை எல்லாம் நேசித்து விட்டால் கண்ணீருக்கே அவசியமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் மேம்பட

நானே பெரியவன். நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்

அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டேயிருப்பதை விடுங்கள் (Loose Talks)

எந்த விஷயத்தையும், பிரச்சினையையும் நாசூக்காக கையாளுங்கள் (Diplomacy) விட்டுக்கொடுங்கள். (Compromise)

சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆகவேண்டும் என்று உணருங்கள். (Tolerance)

நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள் (Adamant Argument) குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள் (Narrow Mindedness)

உண்மை எது? பொய் எது? என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள். (Carrying Tales)

மற்றவர்களைவிட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப் படாதீர்கள் (Superiority Complex)

அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள் (Over Expectation)

எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக்கொண்டிருக்காதீர்கள்.

கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பிவிடாதீர்கள்

அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்

உங்கள் கருத்துக்களில் உடும்புப்பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் (Flexibility)

மற்றவர் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள் (Misunderstanding)

மற்றவர்களுக்குரிய மரியாதையைக் காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள் (Courtesy)

புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாததுபோல் நடந்து கொள்ளாதீர்கள்.


பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும், பண்பையும் காட்டுங்கள். அவ்வப்போது நேரிற் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.

பிரச்சனைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

அன்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிட மாய் எங்கள் வாழ்விற்கு வழிகாட்டியாக திகழ்ந்து சிவபதமடைந்த **அமரர் பொன்னம்மா சதாசிவம்** அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஓடோடிவந்து உதவி செய்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளி யிட்டோருக்கும், மரணச்சடங்கிலும் அந்தி யேட்டி சபிண்டீகரணக் கிரியைகளிலும் கலந்துகொண்டோருக்கும் இச்சடங்கு களைச் சிறப்புறச் செய்வதற்கு உதவிய அனைவருக்கும் சபிண்டீகரணக் கிரியை களை நடத்திய குருமாருக்கும் இந்த மலரின் ஆக்கத்திற்குதவிய அத்தனை உள்ளங்களுக்கும் இம்மலரினை அழகாக அச்சிட்டுதவிய திருக்கணித பதிப்பகத் தினருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்ஙனம்

**மீசாலை.** **கணவன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



Sivaranjanam 210

திருக்கணித பதிப்பகம் - சாவகச்சேரி 021 227 0257

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org